# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*
கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## ஆசிரியர் குழு


முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஒ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்



### நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

### முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்"பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# மானிடவியல்

# பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்

ஆய்வாளர்:கா. இராஜமாணிக்கம்

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),

முதுகலை தமிழாய்வுத்துறை,

கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,

திருவண்ணாமலை. 606 603

திருவள்ளுவர் பல்கலைகழக இணைவு பெற்றது.

நெறியாளர்:பா. சுப்புலெட்சுமி

இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர்,

முதுகலை தமிழாய்வுத்துறை,

கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,

திருவண்ணாமலை. 606 603

**ஆய்வுச் சுருக்கம்**

தொன்மையான மாந்தரினத்தின் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்கள் ஜவ்வாது மலையில் வாழும் மலையாளி பழங்குடி மக்கள் ஆவர். இம்மக்கள் இல்லுறை தெய்வங்கள், கானுறை தெய்வங்கள், நீருறை தெய்வங்கள், இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, முன்னோர் வழிபாடு, குலதெய்வ வழிபாடு என பலவகையான வழிபாட்டு முறைகளை மேற்கொள்கின்றனர். அவற்றில் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் கொண்டது தாய்த் தெய்வ வழிபாடாகும். உலகில் தோன்றிய தொன்மையான வழிபாடுகளுள் ஒன்றாக தாய்த் தெய்வ வழிபாடு திகழ்கிறது. இந்தியாவில் சிந்துவெளி நாகரிக மக்கள் வாழ்ந்த காலத்திலேயே தாய்த் தெய்வ வழிபாடு சிறப்புற்று இருந்ததை அங்கு கிடைத்த முத்திரைகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. வேத காலத்திற்கு முன்பிருந்தே தாய்தெய்வ வழிபாட்டை மக்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். புராண இதிகாச காலங்களில் பெண் தெய்வங்கள் ஆண் கடவுளர்களுடன் தொடர்புப்படுத்தப்பட்டனர். அதன் தொடர்ச்சியாக பெண் தெய்வ வழிபாட்டை சக்தி வழிபாடு என்றும் அவ்வழிபாட்டை மேற்கொள்பவர்கள் சாக்தர்கள் என்றும் அழைக்கப்படலாயினர். அவ்வகையில் ஜவ்வாதுமலையில் வாழும் பெரும்பாலான பழங்குடி மக்களின் வழிபடு தெய்வமாக, குலதெய்வமாக காளி விளங்குவதைக் காண முடிகிறது. ஆதி காலத்திலிருந்தே தாய்தெய்வ வழிபாட்டை பழங்குடி மக்கள் மேற்கொண்டு வந்துள்ளதையும் அறிய முடிகிறது. குலதெய்வத்திற்கான வழிபாட்டை இங்குள்ள மக்கள் கோடைப்பச்சை என்ற வகையில் குறிப்பிடுகின்றனர். குலதெய்வத்தைத் தொடர்ந்து இதர வழிபடு தெய்வங்களுக்கும் முக்கியத்துவம் தந்து சிறப்பு பூசை வழிபாடுகளை நிகழ்த்துகின்றனர். பொங்கல் வைத்தல், கிடா வெட்டுதல், பொரி கடலை படைத்தல் என்ற வகையில் வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன.

*Study Summary*

*The Malayalee tribal people living in Javvadu Hills have cultural elements of ancient Mandarin. These people are Illurai deities and Kanurai deities. Nirurai deities, nature worship, Nadukal worship, ancestor worship, clan deity worship are performed in various forms of worship. Prominent among them is the worship of the Mother Goddess. Dog worship is one of the oldest forms of worship in the world. From the seals found there, it is possible to know that the worship of the Mother Goddess was prominent even during the time of the Indus Valley Civilization in India. People have been worshiping Mother Goddess since before the Vedic period. Female goddesses were associated with male gods in Puranic epic times. As a result, the worship of goddess came to be known as Shakti worship and the worshipers were called Shakti. In this way, it can be seen that Kali is worshiped as the deity and family deity of most of the tribal people living in Javwadumalai. It is also known that the tribal people have been carrying out the worship of Mother Goddess since the early times. The worship of the deity is referred to by the people here as Uchipachai. Following the family deity, other deities are also worshiped and special worship is performed. Worships are performed in the form of putting Pongal, cutting Kita and making Pori Kadala.*

*Keywords:*

*Thampiraan veedu,sani muulai, akinimuulai, thiirkka muulai, pajanai koyil*

**திறவுச் சொற்கள்**

தம்பிரான் வீடு, சனி மூலை ,அக்னி மூலை ,தீர்த்த மூலை ,பஜனை கோயில் ,

**சித்திரைத் திருவிழா**

தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பறைசாற்றுவனவற்றுள் முக்கியமானதொரு இடத்தைப் பெறுவது பண்டிகைகளும் விழாக்களும் ஆகும். பண்டைக் காலத்திலிருந்தே திருவிழாக்கள் நடைபெற்று வந்துள்ளதை மடியா விழாவின் யாணர் நன்னாடு [1] என்ற புறநானூறு பாடல் வரியாலும், அழியா விழவின் அஞ்சுவரு மூதூர் [2] என்ற அகநானூற்றுப் பாடல் வரியாலும் அறிய முடிகிறது.

ஓர் ஆண்டின் அனைத்துப் பருவங்களிலும் திருவிழாக்கள் நடைபெறுவது இயல்புதான் என்றாலும் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களே விழா எடுக்கச் சிறந்த மாதங்களாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில், வேனிற் பருவமாகிய கோடைக் காலத்தில் நடைபெறக்கூடிய குலதெய்வக் கோயில் ஆலயத் திருவிழாவை **கோடைப் பச்சை** என்ற பெயரில் குறிப்பிடுகின்றனர்[3]. இஃது ஒரு நாள் விழாவாகும். இதுவே புதியதாக கோயில் கட்டப்பட்டாலோ அல்லது சாமி சிலைகள் புணரமைக்கப்பட்டாலோ **இராப் பண்டிகை** (இரவுப் பண்டிகை) என்ற பெயரில் இத்திருவிழாவை ஒன்பது நாட்கள் வரையில் கொண்டாடி மகிழ்கின்றனர்.

**தாய்த் தெய்வ வழிபாடும் புராண கதைப் பின்னணியும்**

தமிழ்நாட்டின் சமூக வரலாற்றினையும் பண்பாட்டு வரலாற்றினையும் கண்டுணருவதற்குத் துணை நிற்கும் சான்றுகளில் குறிப்பிடத் தகுந்தது தாய்த் தெய்வ

வழிபாடாகும். தமிழ்நாட்டில் வணங்கப்பெறும் தாய்த் தெய்வங்களில் மாரியம்மன், காளியம்மன், பொன்னியம்மன், இசக்கியம்மன், பத்திரகாளியம்மன் போன்றவை குறிப்பிடத்தக்க தெய்வங்கள் ஆகும். [4]

பழங்குடி மக்களின் பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிக்கும் முக்கியமான திருவிழாக்களில் ஒன்று கோடைப் பச்சை திருவிழாவாகும். இத்திருவிழாவானது பங்குனி மாதம் பதினேழாம் தேதியை மையமிட்டு அமையும் செவ்வாய்க் கிழமைகளில் அல்லது வெள்ளிக் கிழமைகளில் நடத்தப்படுகிறது. மாரிக்கு ஏற்ற நாள் வெள்ளிக்கிழமை என்றும், காளிக்கு ஏற்ற நாள் செவ்வாய்க் கிழமை என்றும் கருதப்படுவதால் அதனையே திருவிழாவுக்கு உகந்த நாளாகவும் முடிவு செய்து கொள்கின்றனர். கண்ணகி வழிபாடே இங்கு காளி வழிபாடாகவும், குலதெய்வ வழிபாடாகவும் மேற்கொள்ளப்படுகிறது.

**கதைப் பின்னணி**

மதுரையை ஆண்ட ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன் ஆட்சிக் காலத்தில் கயவர்களை காளி கோயில் முன்பாக நரபலியிடும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அச்சமயத்தில் அங்குள்ள காளி கோயில் ஒன்றை பாண்டிய மன்னன் ஏதோ ஒரு காரணத்திற்காக இழுத்து பூட்டி விடுகிறான். மேலும் இக்கோயிலுக்கு யாரும் வரக்கூடாது என்றும் பூசைகள் ஏதும் நிகழ்த்தக் கூடாது என்றும் மீறினால் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் ஆணை பிறப்பித்து விடுகிறான். இதனை அறியாத எண்ணெய் வணிகன் ஒருவன் தனது மனைவியுடன் வணிக நிமித்தமாக மதுரைக்குள் செல்லும்போது அக்கோயில் முன்பாக வணங்கி விட்டு தனது வியாபாரம் நல்லபடியாக முடிந்து விட்டால் அதற்குப் பரிகாரமாக கோயிலில் ஆயிரம் திருவிளக்குகளை ஏற்றி வைக்கிறேன் எனறு வேண்டிக் கொள்கிறான். வியாபாரமும் நல்லபடியாக முடிகிறது. தான் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப எண்ணெய் வியாபாரியும் மாலையில் திருவிளக்கேற்றி வைத்து விட்டு பூசை செய்வதை அறிந்த பாண்டிய மன்னன் கடுங்கோபமுற்று தனது ஆணையை மீறிய குற்றத்திற்காக அவர்கள் இருவரையும் கைது செய்து அக்காளி கோயிலிலேயே நரபலியிட்டுக் கொன்று விடுகிறான்.

கொடுங்கோன்மை மிக்க அப்பாண்டிய மன்னனை அழிக்கும் பொருட்டு சொக்கநாதப் பெருமான் கொலையுண்ட வாணிகனையும் வாணிகச்சியையும் மறுபிறவி எடுக்க வைக்கிறார். மறுபிறவி எடுத்த அவர்களே கோவலன் மாதவியாகப் பிறப்பெடுக்கின்றனர். காளிதேவதையும் கண்ணகியாக மானிடப் பிறவியில் மறு அவதாரம் எடுக்கிறாள். கண்ணகி பிறக்கும் பொழுதே தமது இடது கரத்தில் செப்போட்டுடனும், வலது கரத்தில் கொந்தத்துடனும், காலில் சிலம்புடனும், கழுத்தில் தொப்புள் கொடி சுற்றிய மாலையுடனும், தேகத்தில் பேரொளி அம்சத்துடன் வடிவம் கொண்டவளாகப் பிறப்பெடுக்கிறாள். இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவளது பெற்றோர்கள் கண்ணகியின் ஜாதகத்தை ஜோதிடர்களைக் கொண்டு கணித்துப் பார்க்கின்றனர். ஜோதிடர்கள் கண்ணகியின் ஜாதகத்தைக் கணித்து பார்த்து விட்டு “மாலையிட்டுப் பிறந்த பெண் மாளிகைக்கு ஆகாது, கொந்தத்தோடு பிறந்த பெண் கோட்டைக்கு ஆகாது, செப்போடோடு பிறந்த பெண் சீமைக்கு ஆகாது, சிலம்போடு பிறந்த பெண் மதுரைக்கு ஆகாது, மொத்தத்தில் இப்பெண் உம்குடும்பத்திற்கு ஆகவே ஆகாது” என்று சுருக்கமாகக் கூறி விடுகின்றனர். அதிர்ச்சியில் உறைந்த கண்ணகியின் பெற்றோரும் இக்குழந்தையின் வடிவழகைக் கண்டு வியந்து இவள் சாதாரணப் பெண்ணல்ல; தெய்வாம்சம் நிறைந்தவள்; அவதாரம் எடுத்துள்ளாள்; நம்மால் வளர்க்க இயலாது என்றெண்ணி, தங்கத்தில் பெட்டி செய்து அதில் அக்குழந்தையை படுக்க வைத்து ஆற்றில் விட்டு விடுகின்றனர்.

பூம்புகார் பட்டணத்தில் பெருவணிகரும் கப்பல் வணிகர்களுக்குத் தலைவருமான மாநாய்க்கன் கண்ணில் அப்பெட்டி தென்படுகிறது. பெட்டியில் இருந்த குழந்தையைக் கண்ட

அவர் அதனை வேறு யாருக்கும் தர மனமில்லாது, தானே வளர்க்கும் எண்ணத்துடன் அரண்மனைக்குக் கொண்டு சென்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வரலானார். பருவ வயதை எட்டியவுடன் புகார் நகரைச் சேர்ந்த மாசாத்துவான், வண்ணமாலைத் தம்பதியரின் ஒரே மகனான கோவலனுக்கு மணம் முடித்து வைக்கின்றனர். விதி வசத்தால், திருமண விழாவைக் காண வந்திருப்போரை மகிழ்ச்சிப்படுத்த ஆட வந்த கணிகையர் குலப் பெண் மாதவியின் ஆடல் அழகில் மயங்கிய கோவலன் அவளை விட்டுப் பிரிய மனமில்லாது அவளோடு சென்று விடுகிறான். காலங்கள் கடந்து சென்றது. ஒருகட்டத்தில் கண்ணகி கோவலனுக்குத் தூது அனுப்புகிறாள். மாதவியிடமிருந்து பிரிந்து வந்த கோவலன் புகார் நகரில் வசிக்க மனமில்லாது மதுரைக்குப் பயணமாகிறான். கூடவே கண்ணகியையும் அழைத்துச் செல்கிறான். வழித்துணையாக வந்த சமணத் துறவி கவுந்தி அடிகளின் துணையோடு ஆயர்குலப் பெண் மாதரி வீட்டில் கோவலனும் கண்ணகியும் அடைக்கலம் ஆகின்றனர்.

சிலம்பு விற்கப் போன இடத்தில் கோவலன் கொல்லப்படுகிறான். மதுரை எரியுண்டு அழிந்தது. மன்னனும் மாண்டான். சினம் கொண்ட கண்ணகி தன் தாகம் தீர்க்க ஓர் குளத்துக்குள் நீர் அருந்த இறங்கிய சமயத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் காட்சி தந்து "தங்கையே நீ உன் கோபத்தைக் கைவிடுவாயாக! கலியுக நாயகியாக! மக்களைக் காக்கும் தேவதையாக! கொலுவில் வீற்றிருந்து அவர்கள் செய்யும் பூசையை மனம் உவந்து ஏற்றுக் கொள்வாயாக!" என்று வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப கண்ணகியும் காளியாக உருமாறி மக்களைக் காத்து வருவதாக நம்பப்படுகிறது. [5] அதன் அடிப்படையிலேயே காளி தேவதைக்கு வருடந்தோறும் கண்ணகி மதுரையை எரித்த நாளாகக் கருதப்படும் பங்குனி பதினேழாம் நாளை மையமிட்டு கோடை பச்சை என்றழைக்கப்படும் சித்திரைத் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

**கோடைப்பச்சை கொண்டாடுவதன் நோக்கம்**

ஆண்டின் தொடக்கமாக அமையும் சித்திரை மாதத்தில் அல்லது அதற்கு முன்பாக ஏதாவதொரு செவ்வாய்க் கிழமையை மையமாகக் கொண்டு குல தெய்வத்தின் மனதைக் குளிர்வித்து விட்டால் ஆண்டின் அனைத்து மாதங்களிலும் தங்களுக்குத் தேவையான வேட்டை உணவுகள் இடையறாது கிடைத்துக் கொண்டே இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இத்தகைய பலி கொடுக்கும் சடங்கினை காலங்காலமாக மேற்கொண்டு வருவதாகக் கூறுகின்றனர்.[6] மேலும் சுற்று வட்டாரத்தில் வணங்கப்படும் அனைத்து தெய்வங்களையும் இத்திருவிழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து வந்து கொழுவில் அமரச் செய்வித்து திருவிழாவில் பங்கேற்க வைப்பதும் இவ்விழாவின் சிறப்பம்சமாகும். மக்களும் தங்களது உற்றார் உறவினர்களை வரவழைத்து அவர்களுக்கு கறி விருந்து கொடுத்து உபசரித்து வழி அனுப்புகின்றனர்.

**ஒன்பது நாள் திருவிழாவும் சடங்கு முறைகளும்**

**திங்கள் கிழமை:-**

ஒன்பது நாள் திருவிழாவின் தொடக்க நிகழ்வாக திங்களன்று காலை 9.00 மணி அளவில் ஊர் மந்தையில் இடம்பெறும் மாரியம்மன் கோவில் எதிரில் கொடிக் கம்பம் நடுவர். அதற்கு எண்ணெய், சீயக்காய், மஞ்சள், பால் ஆகியவற்றை விட்டு திருமஞ்சனம் செய்வர். பிறகு காப்பு கட்டும் சடங்கினை மேற்கொள்வர். கொடிக் கம்பத்தின் கீழே சாணியில் பிள்ளையார் பிடித்து வைத்து அருகம்புல் சாத்தி வெற்றிலையில் பாக்கு வைத்து, பொரி கடலை படைத்து, தெங்காய் உடைத்து வழிபாடுகள் நிகழ்த்துவர்.

*மாலை 4.00 மணி அளவில் கோவிலில் இடம்பெறும், சாமி பூசைக்குப் பயன்படக்கூடிய மணி, சிலம்பு, சங்கு, சேமகலம், கத்தி, கொந்தம் ஆகியவற்றை வெளியில் கொண்டு வந்து எண்ணெய், சியக்காய், மஞ்சள், பால் விட்டு நீரால் கழுவி சுத்தம் செய்வர். பின்னர் அதற்கு சந்தனம், குங்குமம் இட்டு தீபாராதனை காட்டி வழிபடுவர். அதன்பின்னர் சாமி சிலைகளையும் சுத்தம் செய்வர். அதனைத் தொடர்ந்து சாமிக்கு உரித்தான அணிகலன்களை* '**பூநார்ஜாடு**' *என்றழைக்கப்படும் சாமி கூடையில் அடுக்கி வைத்து விட்டு அதற்கும் படையலிட்டு பூசை செய்வர்.*

*இரவு 9.00 மணி அளவில் அனைத்து சாமிகளையும் அழைத்து கொலுவில் அமர்த்தும் சாங்கிய சடங்கு நடைமுறைகளை ஊர் மந்தையில் கோவில் பூசாரி மேற்கொள்வார். அப்போது சாமி அழைக்கும் பூசாரி விநாயகர், சரஸ்வதி, விஷ்ணு, சிவன், உமையாள், காளி, மாரி, முருகன் என அனைத்து தெய்வங்களுக்கும் உரிய துதி மொழிகளைத் (தோத்திரம்) தமிழில் கூறி அவ்விடத்தில் வந்து கூடுமாறு வேண்டுவார். சான்றாக சில துதி மொழிகள் வருமாறு:*

**விநாயகர் துதி**

*“முந்தி முந்தி விநாயகனே!*
*முக்கண்ணனார் தன் மகனே!*
*கந்தனுக்கு முன் பிறந்த*
*கணபதியே! முன் நடவாய்*
*வேலவர்க்கு முன் பிறந்த*
*விக்னேஸ்வரா! முன் நடவாய்*
*சாரதி நாயகனே! எங்க*
*சப்பாணிப் பிள்ளையாரே!*
*ஐந்து கரத்தோனே! எங்க*
*ஆனைமுகப் பிள்ளையாரே!*
*சடுதியிலே வந்திங்கு - எங்கள்*
*சங்கடங்கள் தீருமய்யா!”*

**விஷ்ணு துதி**

*“ஏழுமலை ஆண்டவரே!*
*எம்பெருமாள் மாயவரே!*
*வெங்கடாசலபதியே! வேணுகோபாலரே!*
*அண்டத்தை அளந்தவனே!*
*அரிநமோ நாராயணா!*
*எங்கும் நிறைந்தவனே!*
*ஏகவர்ணா வாரும் சுவாமி!”..*

**சிவன் துதி**

“மாயாண்டி சொக்கநாதா!
மகாதேவா! வர வேண்டும்
பேயாண்டி சொக்கநாதா!
பெருமானே வர வேண்டும்
அண்ணாமலை உண்ணாமுலையானே!
ஆதிசக்தி பார்வதி நாயகனே!
வரவேணும் இந்தவேளை
பக்தனுக்கு வரமளிக்கும்
ஆதிபரமேஸ்வரா! வரணும் சாமி”..

**காளி துதி**

“ஓம் சக்தி! பராசக்தி!
காளிகா பரமேஸ்வரி!
மலையாள தேசமெல்லாம்
விளையாட பெண்ணாய் பிறந்தாய்
மலையாள தேசத்துக்கு
மாதாவே! வாருமம்மா!
சிம்ம வாகனம் எறி
சீக்கிரமா வந்திடும்மா!
அன்பான பிள்ளைமேலே
தெம்பாக திரும்பணும்மா!
கொக்கரித்து வந்தாயானா
கோடி மன்னர் அதிருவாரம்மா!
நீ ஆங்காரித்து வாளெடுத்தா
ஆனை படையும் அதிருமம்மா!
நீ வாக்குத் தந்தால் தப்பாது
வரம் கொடுத்தால் மாற்ற மாட்டாய்
வாருமம்மா சீக்கிரமாய்”…

இவ்வாறு பல விதமான துதிமொழிகளைக் கூறி அருகாமையில் உள்ள அனைத்து தெய்வங்களையும் அழைத்து கொலுவில் அமர்த்தும் சடங்கினை நாட்டு பூசாரி மேற்கொள்வார். இச்சடங்கு இரவு முழுக்க விடிய விடிய நடைபெறும். இச்சடங்கின் போது ஊரில் உள்ள அனைத்து ஆண்களுக்கும் காப்பு கட்டுவர். திருவிழா முடியும் வரையில் அனைவரும்

சுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக இக்காப்புக் கட்டுச் சடங்கானது நிகழ்த்தப்படுகிறது.

**செவ்வாய் கிழமை**

காலை 9.00 மணி அளவில் '**தம்பிரான் வீடு**' என்றழைக்கப்படும் பஜனை கோவிலில் இருக்கும் அம்மனுக்கும், இதர தெய்வங்களுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அம்மனுக்குக் கரகம் அமைக்கும் பணியினை மேற்கொள்வர். இக்கரகத்தை எடுக்கும் நபர் பல நாட்களுக்கு முன்பே விரதம் இருக்கத் தொடங்கி விடுவார். இவர்கள் மஞ்சள் அல்லது சிவப்பு நிற காவி வேட்டியினை அணிந்தபடி கரகத்தைத் தலையில் சுமப்பர். கால்களில் சலங்கைக் கட்டுதலும் உண்டு.

பிற்பகல் 3.00 மணி அளவில் ஊருக்குள் இடம்பெறும் பஜனை கோவிலிலிருந்து ஊருக்கு வெளியே அமைந்திருக்கும் காளி கோவிலுக்கு பொங்கல் பானைகளோடு சாமி புறப்பாடு நிகழ்வானது நடைபெறும். அப்பொழுது காளி அம்மன் கரகம், மாரி அம்மன் கரகம், சாமி அலங்காரப் பொருட்கள் நிரம்பிய பூநார் ஜாடு (சாமி கூடை), போத்தராஜா சிலை, காளி அம்மன் சிலை, மாரி அம்மன் சிலை, திரௌபதி அம்மன் சிலை, கிருஷ்ணர் சிலை, அர்ச்சுனன், பீமன், நகுலன், சகாதேவன் என பஞ்ச பாண்டவர்கள் சிலைகள் இடம்பெறும். விதிவிலக்காக இதில் தருமர் சிலை மட்டும் இடம்பெறுவது கிடையாது. ஏனெனில் தருமர் பொய் பேசாதவர்; தரும நெறி நடப்பவர்; நீதிமான் ஆவார். அவர் இருக்கும் இடத்தில் வாழும் மக்கள் அவ்வாறு நடந்து கொள்வது கிடையாது. அதனைக் காணும் போது பொறுமையின் அம்சமாகத் திகழும் தருமருக்குக் கோபம் ஏற்பட்டுவிட்டால் ஊரே தீக்கிரையாகி விடும் என்று அஞ்சுகின்றனர். அதனால்தான் தருமர் சிலையை மட்டும் கோவிலில் இருந்து வெளியே எடுப்பது கிடையாது. சில நேரங்களில் எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டாலும் தருமர் சிலையின் கண்களைக் கட்டி விட்டே வெளியில் கொண்டு வருகின்றனர். சாமி புறப்பாடு நிகழ்வு நடைபெறும்போது அவற்றுடன் கத்தி, கொந்தம், கொடி சீலை, பண்டாரப்பெட்டி போன்றவற்றையும் உடன் கொண்டு செல்வர். அப்போது சங்கு நாதம் ஒலிக்க, சேமகலம் அடிக்க, மணி ஓசை எழும்ப, உருமி மேளம் கொட்ட, கரகாட்டம், சிலம்பாட்டம், சேவையாட்டம் என வாண வெடிகளுடன் வெகு விமரிசையாக சாமி புறப்பாடானது ஊர் புறத்தே வனத்தில் அமைந்திருக்கும் காளி கோவிலைச் சென்றடையும்.

ஊருக்கு வெளியில் அமைந்திருக்கும் காளி கோவிலில் வீட்டுக்கு ஒரு பானை என்ற வகையில் பெண்கள் அனைவரும் குலவை பாடி பொங்கல் வைப்பர். மாலை 6.00 மணி அளவில் காளிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சாமிக்கு அலங்கார படையல் பூஜைகள் நடைபெறும். பெண்கள் அனைவரும் மாவிளக்கு எந்தியபடி கோவிலுக்குச் சென்று வழிபடுவர். இரவு 9.00 மணி அளவில் பூசாரி அனைத்து தெய்வங்களையும் அழைத்து தம்முடைய விருந்து படையலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுவார். சாமி வந்திறங்கிய பிறகு வாண வெடிகளுடன் அனைவரும் சாமியைக் கும்பிட்டு வணங்குவர். அதனைத் தொடர்ந்து இரவு முழுக்க ஆடல் பாடல் நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஏதாவதொரு கலை நிகழ்ச்சி அங்கு நடைபெறும்.

**புதன் கிழமை**

காலை 9.00 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று முடிந்த பிறகு காளி கோவிலில் பச்சை வைக்கும் சடங்கானது நடைபெறும். அப்போது பெண்கள் அனைவரும் வீட்டில் இருந்து அம்மன் படையலுக்குத் தேவையான தட்டு வரிசைப் பொருட்களைக் கொண்டு செல்வர். தட்டு வரிசையில் வெல்லம், தேங்காய், பொரி, கடலை, அவுல்,

வாழைப்பழம், ஆப்பிள், மாம்பழம், திராட்சை, பலாப்பழம், மாவு விளக்கு, இலட்டு, ஜாங்கிரி, மைசூர் பாக்கு, மிக்சர் என்பன போன்ற பல வகையான உணவுப் பொருட்கள் இடம் பெறும்.

பச்சை வைக்கும் சடங்கினைத் தொடர்ந்து சிறப்பு பூசைகள் நடைபெறும். அதன்பிறகு ஆட்டுக்கிடா பலி கொடுக்கும் காவு வாங்கும் சடங்கானது நடைபெறும். பலி கிடாவானது எந்த இடத்திலும் காயம் பட்டிருக்கக் கூடாது; நோய் நொடி இல்லாமல் இருத்தல் வேண்டும் என்பர். முடமானது, காது அறுந்துபட்ட நிலையில் உள்ளது என எந்த விதமான குறைகளும் இல்லாத வகையில் நடுத்தரமான ஆட்டுக் கிடாவையே பலிக்குப் பயன்படுத்துவர். பூசாரி அம்மனை வேண்டி தீர்த்தம் போடும் போது அது உதறினால் மட்டுமே அதனை பலி இடுவர். இல்லையேல் அதனை பலியிட மாட்டார்கள். பலி கிடாவானது முதலில் உடம்பினையும் அதன் பிறகு அது தலையினையும் ஆட்ட வேண்டும். அதனையே சரியான உதறுதலாக கணக்கில் கொள்வர். இத்திரு விழாவில் வீட்டுக்கு வீடு ஆட்டுக்கிடா பலி கொடுப்பதும் உண்டு. ஊர் பொதுவில் பலி கொடுப்பதும் உண்டு. ஆட்டுக்கிடா சிந்தும் இரத்தத் துளிகளுக்கேற்ப ஆட்டினம் பெருகும்; அதனால் நன்மைகள் உண்டாகும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், ஆண்டிற்கு ஒருமுறை தங்களால் இயன்ற இறை காணிக்கை என்கின்ற அடிப்படையிலும் அம்மனுக்கு பலியிடும் சடங்கினை மேற்கொள்கின்றனர். அவ்வாறு பலியிடப்பட்ட இரத்தத்தைப் ஒரு குவளையில் பிடித்து பொங்கல் சோற்றில் நனைத்து கோவிலைச் சுற்றி பலி போடும் சடங்கினை கோயில் பூசாரி மேற்கொள்வார். சனி மூலை, அக்னி மூலை, தீர்த்த மூலை என்னும் மூன்று மூலைக்கும் சென்று பலி போடுவார். வடக்கு திசை ஆண்டவன் (பெருமாள்) மூலை என்பதால் அதனை மட்டும் விட்டு விடுவார். பலி போடும்போது கீழ்க்கண்ட வாசகத்தை கோயில் பூசாரி பயன்படுத்துகிறார்.

**கிழக்கு திசை**

பலிசோறு இடுவதற்கு முன்பாக பூசாரி '**நெல்லிவாய் காளியம்மா! உனக்கு உதிரமும் பலி சோறும் ஒரு காவாளம் போடப் போகிறேன், ஊராளி தேவரெல்லாம் வரவேணும் இந்த வேளை, மூன்று மூலை, மூன்று திக்கு, மூன்று காவாளம் போடப் போகிறேன்**' என்று கூறியவாறு கிழக்கு திசையின்கண் இரத்தச் சோற்றை வாரி இறைப்பார்.

**தெற்கு திசை**

'**தீ மூலைக்கு அந்திரி சுந்தரி தேவதையே! ஆகாய வாணி! பூமா தேவி! கங்கா! பவானியே! நீ வரவேணும் இந்த வேளை, மூன்று மூலை, மூன்று திக்கு, மூன்று காவாளம் போடப் போகிறேன்**' என்று கூறியவாறு தெற்கு திசையின்கண் பலி சோற்றை வாரி இறைப்பார்.

**மேற்கு திசை-**

'**வலுதலம்பட்டு காளியம்மா! நீ வரவேணும் இந்த வேளை, மூன்று மூலை, மூன்று திக்கு, மூன்று காவாளம் போடப் போகிறேன். பெருமுட்டம் பெரிய காளி! மண்டபாறை காளியம்மா! மூன்று மூலை, மூன்று திக்கு, மூன்று காவாளம் போடப் போகிறேன்**' என்று கூறியவாறு பலி சோற்றினை மேற்கு திசையின்கண் வாரி இறைப்பார். அவ்வாறு பலி சோற்றினை வாரி இறைக்கும் போது சில வேளைகளில் காளிக்கு ஏவல் செய்யும் கூலிப்படைகள் பூசாரியையே பலியாக ஏற்றுக் கொள்வதும் உண்டு என்று கருதி பூசாரிக்கு முன்பாக வேலாயுதம். வாலாயுதம், சூலாயுதத்தால் தடை போடும் நடைமுறை வழக்கமானது காணப்படுகிறது.

காளி தேவதைக்கு பலி கொடுக்கும் சடங்கினைத் தொடர்ந்து அம்மனுக்கு கோயில் உள்ளே ஆலாத்தி எடுக்கும் கண்ணேறு கழித்தல் சடங்கானது நடைபெறும். இச்சமயத்தில் பெண்கள் அனைவரும் வீடு வந்து சேர்ந்து விடுவர். பலியிட்ட இடத்திற்கு பேய்கள் வந்து கூடும். அதனால் தமக்குத் துன்பங்கள் நேரிடலாம் என்பதால் பெண்கள் பலி சடங்கிற்கு பின்னர் அவ்விடத்தில் இடம்பெறுவது கிடையாது. ஆண்கள் மட்டுமே காணப்படுவர்.

அம்மனுக்கான வழிபாட்டுச் சடங்குகள் முடிந்த நிலையில் படையல் இடப்பட்ட பொருட்களை எடுத்து அனைவருக்கும் உண்ணுமாறு கொடுத்து விடுவர். அம்மனுக்குப் பூட்டப்பட்ட நகை அலங்காரத்தை எல்லாம் அதன் பிறகு கழற்றி விடுவர். ஆண்கள் பொங்கல் பானைகளை விட்டிற்குக் கொண்டு செல்வர். பலியிடப்பட்ட ஆட்டுக் கிடாய்களையும் தூக்கி செல்வர். இறுதியாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மேள தாளத்துடன் சாமி சிலைகள் தம்பிரான் வீடு வந்து சேரும். அன்று இரவு முழுக்க உள்ளூர் பெருமக்களால் நடத்தப்படும் தெருக்கூத்துக் கலையானது தம்பிரான் வீட்டு வாசலில் அரங்கேறும்.

**வியாழக்கிழமை**

காலை 9.00 மணி அளவில் மூரி எருதினைப் பிடித்துக் கட்டும் மரக்கம்பத்தினை ஊர் மந்தையில் உள்ள மாரி அம்மன் கோவில் எதிரில் நடுவர். அம்மனுக்காக விடப்படும் கோயில் காளையை 'மூரி எருது' என்று குறிப்பிடுவர். அதனை வடம் கயிறு கொண்டு பிடித்து வந்து கம்பத்தில் கட்டி விடுவர். மாலை வரையில் அது விரதம் இருக்கும். நீர் ஆகாரம் எதுவும் தரமாட்டார்கள். பஜனை கோயிலில் இருந்து கத்தி, கொந்தம், கொடிசீலை, கருட கம்பம், பண்டாரப்பெட்டி ஆகியவற்றை மட்டும் மேள தாளத்துடன் **கோவிந்தா! கோவிந்தா! கோ ஹோவிந்தா!** என்று கூறியபடி மந்தயில் இடம்பெறும் மாரியம்மன் கோயிலுக்குச் கொண்டு செல்வர். அங்கு ஊர் பொதுவில் பொங்கல் பானை ஒன்று வைத்து பொங்கல் இடுவர். அதற்கு 'பால பானை' என்று பெயர். பொங்கல் சாதத்தை எடுத்து சாமிக்குப் படைப்பர். அதன் பிறகு கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ள எருதினைப் பிடித்து வடம் போடுவர். மேள தாளம் முழங்க வடம் பிடித்து இழுத்தபடி கோயிலைச் சுற்றி மூன்று முறை வலம் வருவர். அதன் பிறகு எருதுக்கு பூ மாலை போட்டு சந்தனம், குங்குமம் இட்டு, சங்கு, சக்கரம், சூலாயுதம் போன்றவற்றை பொறிப்பர். அதன் வாயில் வெல்லம், வாழைப்பழம், பொரி, கடலை, அவில் போன்றவை கலந்த தண்ணீரை ஊற்றி அதன் விரதத்தை முடித்து வைப்பர். அப்போது கோவில் பூசாரி அதன் காதில் பின்வருமாறு கூறுவார்.

“புல்லை கண்டால் மேய்ந்து கொள்
தண்ணீரைக் கண்டால் குடித்துக் கொள்
நிழலைக் கண்டால் படுத்துக்கொள்
பட்டி கண்டால் வந்துவிடு
நேரத்திற்கு வந்து விடு
என் பேச்சைக் கேளு
உன் பேச்சை விட்டுவிடு
எந்த பட்டிக்கும் போகாதே
சொந்த பட்டிக்கு வந்துவிடு”

என்று அறிவுரை பகர்வார். இத்துடன் அன்றைய நாள் சடங்கு முறைகள் அனைத்தும் நிறைவுபெறும். ஊர் மந்தையிலிருந்து சாமியும் தம்பிரான் வீடு எனப்படும் பஜனை கோயிலுக்கு வந்து சேரும்.

**வெள்ளிக்கிழமை**

மாலை 7.00 மணி அளவில் பஜனை கோவிலில் இருந்து சாமியுடன் பெண்கள் பொங்கல் பானைகளோடு மாரியம்மன் கோவிலுக்குக் புறப்பட்டுச் செல்வர். அங்கு மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்படும். அதன் பிறகு ஆடை ஆபரணங்கள் பூட்டப்பெற்று பூசைகள் நடைபெறும். இரவு 10.00 மணி அளவில் அம்மன் கரகம் மற்றும் சாமி சிலைகள் ஊர்வலம் வரும். அதனைத் தொடர்ந்து பெண்கள் அனைவரும் மாவிளக்குச் சட்டியை ஏந்தியபடி மாரியம்மன், கோவிலை சுற்றி கரகத்துடன் மூன்று முறை வலம் வந்து வழிபடுவர். அன்று இரவு மாரியம்மன் கோவில் முன்பாக தெருக்கூத்து அல்லது சேவையாட்டமானது விடிய விடிய நடைபெறும்.

**சனிக்கிழமை:-**

காலை 10.00 மணி அளவில் அம்மனுக்குக் கூழ் ஊற்றும் சடங்கினை மேற்கொள்வர். அந்த நேரத்தில் தீ மிதித்தலும் உண்டு. அதன் பிறகு சாமி சிலைகள் ஊர்வலம் வரும். இறுதியாக பஜனை கோயிலைச் சென்றடையும். அப்பொழுது அனைத்துப் பெண்களும் ஆலஞ்சுத்தும் சடங்கினை மேற்கொள்வர். அதன் பிறகு அம்மனுக்குத் தாலாட்டுப் பாடல் பாடும் சடங்கு நடைபெறும்.

**தாலாட்டுப் பாடல் வருமாறு:-**

“ஓராங் கரகமம்மா ஓடிவந்த பூங்கரகம்
ஈராங் கரகமம்மா இசைந்தாடும் பொன்கரகம்
மூணாம் கரகமம்மா முத்தான பூங்கரகம்
நாலாம் கரகமம்மா நாடிவந்த பொன்கரகம்
ஐந்தாம் கரகமம்மா அசைந்தாடும் பூங்கரகம்
ஆறாம் கரகமம்மா ஆடிவரும் பொன்கரகம்
ஏழாம் கரகமம்மா எழுந்தாடும் பூங்கரகம்
எட்டாம் கரகமம்மா எடுத்தாடும் பொன்கரகம்
ஒன்பதாம் கரகமம்மா உயர்ந்தாடும் பூங்கரகம்
பொன்கரகம் மேலேறிய புண்ணியவதியே உட்காருமம்மா”

என்று தாலாட்டுப் பாடல் பாடி அம்மனை கோவிலினுள் இறக்கி வைப்பர். ஊருக்குக் காவல் தெய்வமாக மாரியம்மனும், ஊர் எல்லைக்குக் காவல் தெய்வமாக காளி தேவதையும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. காளியும் மாரியும் பொதுவான பெயர்களே ஆயினும் ஊருக்கு ஊர் இத்தெய்வங்களின் பெயர்கள் மாறுபடுகின்றன. அதிலும் குறிப்பாக காளி தேவதையின் பெயர்களே மாறுபட்டு அமைகின்றன. சான்றாக,

1. புலியூர் - திக்கியம்மாள்
2. நெல்வாய் - அரவநாச்சி

| | | |
|---|---|---|
| 3. அத்திப்பட்டு | - | இரவநாச்சி |
| 4. பெரியகீழ்பட்டு | - | சேமியம்மாள் |
| 5. சின்னகீழ்பட்டு | - | சேமியம்மாள் |
| 6. மேல்பட்டு | - | சேமியம்மாள் |
| 7. பெருமுட்டம் | - | பெரியகாளி |
| 8. எருக்கம்பட்டு | - | சின்னகாளி |
| 9.தாளூர் | - | குள்ளியம்மாள் |
| 10. ஆட்டியானூர் | - | காளி |
| 11.கோம்பை | - | திக்கி |
| 12. வளுதலம்பட்டு | - | காளி |
| 13.புதூர் | - | திக்கி |
| 14. தவரக்குப்பம் | - | காளி |
| 15.கிளையூர் | - | தாலமடுவு காளி |
| 16. மண்டபாறை | - | காளி |
| 17. கல்லாத்தூர் | - | காளி |

என்பன போன்ற பெயர்கள் ஊருக்கு ஊரு வேறுபடுவதைக் காணலாம்.

**ஞாயிற்றுக்கிழமை:-**

இறுதியாக காட்டில் இடம்பெறும் வேட்டை தெய்வங்களுக்கும் பூசைகள் செய்து பலி கொடுத்து வணங்குவர். ஐவ்வாது மலையின் தென் பகுதியில் இடம்பெறும் ஒன்பது கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் அனைவரும் **மோர்புட்டான்** என்றழைக்கப்படும் வேட்டைக்கார சாமியை காட்டில் சென்று வழிபட்டு வருகின்றனர்.

வெள்ளக்கல் மலை என்றழைக்கப்படும் அடர்ந்த வனத்தினூடே தாளூரைச் சேர்ந்தவராகக் கருதப்படும் மோர்புட்டான் என்பவருக்கும் மேல்பட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் இடையே திருமணம் நடந்தேறியதாகக் கூறப்படுகிறது. மணமகன் மறுமுச்சி (மறுவீடு) போன இடத்தில் உறவினர்களுடன் இணைந்து காட்டுக்குள் வேட்டையாட சென்றபோது புலியால் தாக்குண்டு இறந்து போனாராம். இறக்கும் தருவாயில் அவர், தன்னை ஊருக்குள் கொண்டு செல்ல வேண்டாம் என்றும் புலியால் தாக்குண்ட அவ்விடதிலேயே புதைத்து விடுமாறும் வேண்டிக் கொண்டாராம். மேலும், தான் இவ்விடத்திலேயே கொலுவிருந்து காட்டையும், மாட்டையும், மக்களையும் காத்து இரட்சித்து அருள் புரிவேன் என்று வாக்களித்தாராம். அதனால், வருடந்தோறும் கோடைப்பச்சைத் திருவிழாவைத் தொடர்ந்து மோர்புட்டான் கோயிலுக்கும் சென்று ஆடு, கோழிகளைக் காணிக்கையாக்கி பொங்கல் வைத்து வழிபட்டு வணங்கி வருகின்றனர். மோர்புட்டான் சாமியிடம் வேண்டிக் கொண்டால் நினைத்த காரியம் கைகூடுவதாகக் கூறுகின்றனர்.[7] அதற்குப் பிரதி பலனாக சுதையால் செய்யப்பட்ட ஆடு, மாடு, குதிரை, கோழி உள்ளிட்ட உருவ பொம்மைகளை வேண்டுதலின் தன்மைக்கேற்ப வாங்கி வைக்கின்றனர். பெண்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. கன்னி சாமியாக இடம்பெறும் மோர்புட்டானுக்கு நடுகல் ஒன்றும்

புலி குத்திப்பட்டான் பெயரில் நடப்பட்டுள்ளது. கல்வெட்டுச் சான்று ஏதுமில்லை. காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு எனக் கருதப்படுகிறது.

இவ்வாறு கோடையில் நடைபெறும் சித்திரைப் பெருவிழாவானது ஏழு நாட்கள் நடைபெறும் திருவிழாவாக அங்கு வாழும் மக்களின் உள்ளங்களை மகிழ்ச்சிப்படுத்தும் விதமாக அமைவதோடு மட்டுமின்றி உறவினர்களின் இணைவிற்குப் பாலமாகவும் இவ்விழாவனது அமைக்கின்றது. மேலும் இவ்விழாவினைத் தொடர்ந்து எட்டாம் நாள் விழாவாக அம்மனுக்கு கும்பம் போட்டு படையல் இடுவர். ஒன்பதாம் நாளில் அம்மன் உள்ளிட்ட இதர பல விருந்தினர் தெய்வங்களை ஆற்றில் கரைத்து வழியனுப்பி வைப்பர். அத்துடன் விழாவுடன் தொடர்புடைய சடங்குகள் அனைத்தும் நிறைவு பெற்று விடுகின்றனர்.

**முடிவுரை**

கோடைக் காலத்தில் இடம்பெறும் சித்திரைத் திருவிழாவானது பழங்குடி மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் முக்கியத் திருவிழாக்களில் ஒன்றாகத் திகழ்கிறது. பங்குனி மற்றும் சித்திரை மாதத் தொடக்கத்தில் இவ்விழாவானது இடம்பெறுகிறது. அக்கினி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்பாக இவ்விழா கொண்டாடி முடிக்கப்படுகிறது. காடுகாள் செல்வியாகிய கொற்றவைக்கு உகந்த நாளாகக் கருதப்படும் செவ்வாய்க் கிழமைகளில் இவ்விழா மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் ஒவ்வோர் ஊர் என்ற வகையில் இவ்விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இவ்விழாவினை சிறப்புற நடத்துவதற்கென்று கோயில் பூசாரிகள் மற்றும் உதவியாளர்கள் இடம்பெறுகின்றனர். நாட்டுப் பூசாரி என்பவர் தலைமை பூசாரியாகவும் அவர்க்கு உதவுவதற்கென்று அவ்வூரில் இடம்பெறும் சாந்திக்காரர்கள் என்றழைக்கப்படும் ஊர்க்காவல் தெய்வ பூசாரிகள் இடம்பெறுவர். இவ்விழாவினைத் தொடர்ந்து திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. விருந்துண்டு மகிழ்தல் இவ்விழாவின் நோக்கமாக அமைகிறது. இளைஞர்களுக்கு பெண் பார்க்கும் படலமும் இவ்விழா வாயிலாக அரங்கேறுகிறது. இவ்விழாவானது உற்றார் உறவினர்களின் இணைவிற்கும் உறவுகள் மேம்படுவதற்கும் வகை செய்வதாக அமைகிறது.

**அடிக்குறிப்பு**

1. புறம் 212: 5 — 6
2. அகம் 115: 1
3. இல. கோவிந்தராஜ், புலியூர் கிராமம், வயது 52, ஜவ்வாதுமலை.
4. பரமசிவன், தொ, தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், ப.11, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை — 50, பதி: மே, 2022.
5. குழந்தையம்மாள், பெரியகீழ்ப்பட்டு கிராமம், வயது 75, ஜவ்வாதுமலை.
6. பெ. இலட்சுமணன் (நாட்டுப் பூசாரி), தென்மலை அத்திப்பட்டு கிராமம், வயது 57, ஜவ்வாதுமலை.
7. இரா. வெள்ளையன், மேல்பட்டு கிராமம், வயது 60, ஜவ்வாதுமலை.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com